தமிழ் முரசு 3 திருச்சி 4-12-10

# புவி வெப்பமயமாதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருச்சி, டிச. 4: உலக வெப்பமயமாதல் தடுப்பு நடைமுறை நாளாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து மேக்ட் - வேர்கள் குழந்தைகள் இயக்கம் சார்பில் உலக வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி திருச்சி காதிகிராப்ட் அருகில் இன்று காலை நடந்தது. மேக்ட் அமைப்பின் பொருளாளர் ராகவேந்திரன் நிகழ்ச்சியைத் துவக்கி வைத்தார். மேக்ட் இயக்குநர் சிரில் அலெக்சாண்டர், ஒருங்கிணைப்பாளர் எலிசபெத் மற்றும் 30க்கும் மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியின் போது, புவி வெப்பமயமாவதைத் தடுத்தல், தடுப்பு முறைகள், பாதிப்புகள், மரம் நடுவதன் அவசியம் உள்ளிட்டவை குறித்து முழக்கம் எழுப்பினர். இதன் பாதிப்பு குறித்து விளக்கினர்.